மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாக ஆண்டு ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சை 1995 டிசம்பர்

**வினாத்தாள் I** 45 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

* பின்வரும் எண்களின் தொடரையும் எழுத்துக்களின் தொடரையும் பரிசீலனை செய்து, கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கமையச் செயற்படுக.

2 6 4 8 4 3 4 2 7 6 1 3 6 4 2 5 2 8 1 9

ன் ச ம ப உ அ க த க ம ப ர ல ம

1. மூன்றாவது தடவையாக வரும் இலக்கம் 2 ஐச் சுற்றி ஒரு சதுரமிடுக.
2. நான்காவது தடவையாக வரும் இலக்கம் 4 ஐயும் இரண்டாவது தடவையாக வரும் எழுத்து "ம" ஐயும் ஒரு கோட்டினால் இணைக்க.
3. 6 என்னும் எல்லா இலக்கங்களையும் சுற்றி வட்டமிடுக.
4. மேலே உள்ள தொடரில் மூன்று இலக்கங்களை ஒன்றோடொன்று கூட்டும் போது கூட்டுத்தொகை 20 ஆக வரும். அம் மூன்று இலக்கங்களுக்கும் கோடிடுக.
5. "க" என்னும் எழுத்துடன் ஆரம்பிக்கும் நான்கு எழுத்துக்களைக் கொண்ட ஆண்பிள்ளை ஒருவரின் பெயர் ஒன்றை ஆக்கக்கூடிய நான்கு எழுத்துக்களைச் சுற்றி வட்டமிடுக.
6. ஆசிரியர் வரைந்த படத்தில் உள்ள சில அம்சங்கள் மாணவர் வரைந்த படத்திற் பிழையாகக் காட்டப்பட்டுள்ளன. அத்தகைய பிழையான இடங்களுள் 5 ஐ மாணவர் வரைந்த சித்திரத்திற் கண்டு பிடித்து அவற்றைச் சுற்றி வட்டமிடுக.


ஆசிரியர் வரைந்த படம்



மாணவர் வரைந்த படம்



* பின்வரும் ஒவ்வொரு எழுத்திற்கும் முன்னால் இருக்கும் குறியீட்டை அவதானிக்க.




www.astan.lk




Visit www.astan.lk for more past exam papers.


அதற்கு ஏற்ப பின்வரும் குறியீடுகள் குறித்து நிற்கும் சொற்களை எதிரே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

11.  = ..............................................


12.  = ..............................................


13.  = ..............................................

14.  = ..............................................

15.  = ..............................................

* ஒவ்வொரு படவரிசையிலும் வெற்றுக் கோட்டிற்குப் பொருத்தமான படத்தைத் தெரிவு செய்து அதற்குரிய எண்ணைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

16.  (..............)

17.  ..............)

சரியான விடைக்குரிய எண்ணைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

18. வெள்ளம் ஏற்படும் போது வியாபாரிகள் பொருள்களின் விலைகளை உயர்த்துகின்றனர். வியாபாரிகளின் இச்செயல் எதற்கு ஒப்பாகும்.
(1) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளல் என்பதற்கு
(2) எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம் என்பதற்கு (..................................................)

19. தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பதன் கருத்து
(1) ஒருவர் தான் செய்த செயலின் பயனை அனுபவிப்பார் என்பதாகும்.
(2) முயற்சி திருவினையாக்கும் என்பதாகும். (..................................................)

20. இலங்கையிலே பல பிரதேசங்களில் ஆறுகளும் அருவிகளும் வற்றிக் கொண்டு போகின்றன. இதற்குக் காரணம்
(1) மக்கள் விவசாயத்திற்காக அதிக அளவு நீரைப் பயன்படுத்துகின்றமை
(2) மக்கள் தொடர்ந்து மரங்களை வெட்டி வீழ்த்தி வருகின்றமை. (..................................................)

21. சிறு பிள்ளைகள் மூத்தோர் சொற்கேட்க வேண்டும். இதற்குக் காரணம்
(1) சிறு பிள்ளைகள் நல்லவை தீயவை யாவை என்று அறிந்திராமை
(2) மூத்தவர்கள் சிறு பிள்ளைகளிலும் வயது கூடியவர்களாக இருக்கின்றமை (.............................)

22. ஒரு பிச்சைக்காரன் தெருவோரத்தில் படுத்திருக்கிறான். இதற்குக் காரணம் யாது?
(1) அவன் சுகவீனமுற்று இருத்தல் கூடும்.
(2) அது அவனுக்குச் சௌகரியமான இடமாக இருத்தல் கூடும். (..................................................)

* பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.



Visit www.astan.lk for more past exam papers.

23. 6 பசுக்கள் 6 சாக்குப் புல்லை 6 நாட்களில் தின்று முடிக்குமாயின், ஒரு பசு 6 சாக்குப் புல்லை தின்று முடிப்பதற்கு எவ்வளவு நாட்கள் எடுக்கும்? (.....................................................)

24. ஹரி 6.75 ரூபாய்க்கு அப்பியாசப் புத்தகங்களை வாங்கி 10 ரூபாய்த் தாள் ஒன்றை வியாபாரியிடம் கொடுத்தான். மீதிப் பணமாக ஹரிக்கு ஒரு ரூபாய் நாணயம் 1உம் 50 சத நாணயங்கள் 3உம் 25 சத நாணயங்கள் சிலவும் கிடைத்தன. ஹரிக்குக் கிடைத்த 25 சத நாணயங்கள் எத்தனை?

(.....................................................)

25. எனது நண்பர்களும் நானும் தீபாவளி வாழ்த்திதழ்களைப் பரிமாறிக் கொண்டோம். இதன் பொருட்டு நாம் ஒவ்வொருவரும் மற்றைய ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாழ்த்திதழை அனுப்பினோம். நாம் ஒவ்வொருவரும் பயன்படுத்திய மொத்த வாழ்த்திதழ்கள் 20 ஆகும். எனக்கு எத்தனை நண்பர்கள் உள்ளனர். (.....................................................)


26. இன்று திங்கட்கிழமை, நாளை மறுநாள் 16ஆம் தேதி, சென்ற வெள்ளிக்கிழமை கண்ணன் தனது பிறந்த தினம் நேற்று எனக் கூறினான். கண்ணன் வாரத்தின் எந்த நாளிற் பிறந்தான் எனவும் அவனின் பிறந்த தேதி எதுவெனவும் எழுதுக. (i) நாள் ..............................................

(ii) திகதி ..............................................

27. மாலை 4 மணியளவில் நான் நகரிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வரும்போது எனது நிழல் என்னைப் பின்தொடர்ந்து வந்ததாயின் நான் எந்தத் திசையை நோக்கி நடந்து கொண்டிருந்தேன்?

(.....................................................)

28. பல்வேறு நிறங்கள் தீட்டப்பட்ட மரச் சதுரமுகி ஒன்றின் இரு நிலைகள் கீழே காட்டப்பட்டிருக்கின்றன.






இச்சதுரமுகியில் கறுபபு நிறம பூசபபடட பககததறகு எதிரான பககத்தின் நிறம் யாது?

(.....................................................)


29. சதுர வடிவக் கடதாசி ஒன்றை நான்காக மடித்து அதன் ஒரு பக்கத்தின் வழியே ஒரு சிறு முக்கோணிப்பகுதி வெட்டி எடுக்கப்பட்டுள்ள விதத்தை உரு A காட்டுகின்றது. கடதாசி விரிக்கப்படும் போது பெறும் வடிவத்தைக் காட்டும் படத்தினைத் தரப்பட்டுள்ள ஏனைய நான்கு உருக்களிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

A






30. பெட்டி ஒன்றின் படம் கீழே தரப்பட்டுள்ளது.







Visit www.astan.lk for more past exam papers.


ஓரங்கள் வழியே ஒட்டுவதன் மூலம் இப் பெட்டி செய்யப்படுகின்றது. பெட்டியைச் செய்யும் முறையைக் காட்டும் படத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.





* பின்வரும் பயிற்சிகள் ஒவ்வொன்றிலும் உள்ள முதலாவது படம் அடுத்துத் தரப்பட்டுள்ள நான்கு உருக்களுள் ஒன்றின், வேறொரு திசையிலிருந்து பார்க்கும் பொழுது காணப்படும் தோற்றத்தைக் குறித்து நிற்கிறது. முதற் படம் குறித்து நிற்கும் இச் சரியான உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

31. 

32. 

33. 

34. 

35. 




www.astan.lk

Visit www.astan.lk for more past exam papers.

* பின்வரும் படங்களிற் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கைச் சரியாகக் காட்டுவதற்கு அவற்றின் கீழ் 1, 2, 3, 4, 5 ஆகிய எண்களை எழுதுக.

36.




( ......................... ) ( ......................... ) ( ......................... ) ( ......................... ) ( ......................... )

37.



( ......................... ) ( ......................... ) ( ......................... ) ( ......................... ) ( ......................... )

38.




( ......................... ) ( ......................... ) ( ......................... ) ( ......................... ) ( ......................... )

39.



( ......................... ) ( ......................... ) ( ......................... ) ( ......................... ) ( ......................... )

40.



( ......................... ) ( ......................... ) ( ......................... ) ( ......................... ) ( ......................... )

## மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாக ஆண்டு ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை 1995 டிசம்பர்

**வினாத்தாள் II** 1 மணி 15 நிமிடம்

இரத்தினபுரி, மல்லிகா வீதியில் "சுரம்யா" எனும் இல்லத்தில் வசிக்கும் திருமதி சுசீலா பர்னாந்து என்பவர் வீட்டுப்பணிப் பெண்ணாக வேலை பெற்று டுபாய்க்குச் சென்றார். கீழே அவரைப் பற்றி வினாவப்பட்டிருக்கும் தகவல்களைக் கூறுக.

1. அவரது முழுப் பெயர் : ..........................................................................................
2. அவரது இலங்கை முகவரி : ..........................................................................................
3. அவர் சென்ற இடம் : ..........................................................................................

* * *



www.astan.lk

Visit www.astan.lk for more past exam papers.

திருமதி பர்னாந்து விமான நிலையத்தில் பின்வரும் தகவல்களைக் கொண்ட ஒரு பலகையைக் கண்டார்.

| விமான இலக்கம் | புறப்படும் நேரம் (மணி) | சேருமிடம் |
|---|---|---|
| U.L. 503 | 0050 | டுபாய் |
| T.G. 308 | 0110 | சென்னை (மதராஸ்) |
| E.K. 501 | 0320 | டுபாய் |

4. 0050 மணி என்பதை சாதாரண நேரத்தில் எழுதுக.
5. U.L. 503 எனும் இலக்கத்தைக் கொண்ட விமானம் புறப்பட்டு எவ்வளவு நேரத்திற்குப் பின்னர் இன்னுமொரு விமானம் டுபாய்க்குப் புறப்படும்?
6. இங்கு கூறப்பட்ட விமான நிலையங்களுள் எது இலங்கைக்கு மிகக் கிட்டிய தூரத்தில் உள்ளது?
7. டுபாயில் அவர் பெற்றுக் கொள்ளக்கூடிய மாதச் சம்பளம் 120 அமெரிக்க டொலர்களாகும். அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமானம் ரூபா 51.50 எனின், அவரது மாதாந்தச் சம்பளம் ரூபாக்களில் எவ்வளவு?
8. திருமதி பர்னாந்துவின் வதிவிட நகரம் எதற்குப் பிரசித்தி பெற்றதாகும்?..........................................
9. இலங்கையிலிருந்து அவர் புறப்பட்ட சர்வதேச விமான நிலையம் எங்கே அமைந்துள்ளது?

........................................................

குறித்த ஓர் ஆரம்பப் பாடசாலை பற்றிய தகவல்கள் சில பின்வருமாறு:
பாடசாலை பற்றிய விபரங்கள்

| | 1970 ஆண்டு | 1995 |
|---|---|---|
| காணியின் பரப்பு | 1000 சதுர மீற்றர் | 1400 சதுர மீற்றர் |
| ஆசிரியர்களின் எண்ணிக்கை | 05 | 40 |
| மாணவர்களின் எண்ணிக்கை | 32 | 1075 |

10. இப்பாடசாலை வளர்ச்சியடைந்துள்ளது என்பதைக் காட்டுவதற்கான இரு காரணங்கள் தருக?


* ..........................................................................................
* ..........................................................................................

11. இப்பாடசாலையிலிருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1995ஆம் ஆண்டளவில் எத்தனை மடங்குகளால் அதிகரித்துள்ளது? (.................................................... )

1980 ஆம் 1981 ஆம் ஆண்டுகளில் இப்பாடசாலையிலிருந்த மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய சில விபரங்கள் பின்வருமாறு.

| | ஆண்டு ஒன்று | ஆண்டு இரண்டு | ஆண்டு மூன்று | ஆண்டு நான்கு | ஆண்டு ஐந்து |
|---|---|---|---|---|---|
| 1980 இல் மாணவர் எண்ணிக்கை | 70 | 90 | 80 | 60 | 90 |
| 1981 இல் மாணவர் எண்ணிக்கையிலான அதிகரிப்பு | 20 | 00 | 10 | 20 | 10 |

12. 1981 ஆம் ஆண்டில் மாணவர் எண்ணிக்கையிலான அதிகரிப்பினைக் காட்டுவதற்கான சலாகைக் கோட்டுப் படத்தை வரைக.






Visit www.astan.lk for more past exam papers.

13 1981 ஆம் ஆண்டில் இப்பாடசாலையிலிருந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..................................................................

14. இப்பாடசாலையின் ஒரு மாணவராக உம்மைக் கருதி, ஒவ்வொரு திங்கட்கிழமையும் காலைக் கூட்டத்தில் பாடப்படும் தேசிய கீதத்தின் முதல் இரு அடிகளையும் எழுதுக.

..................................................................

..................................................................

15. புத்தாண்டு விழா நிகழ்ச்சித் திட்டமொன்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பகுதி இங்கு தரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அமைந்த பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| செயற்பாடு | நேரம் |
|---|---|
| தேசியக் கொடியை ஏற்றுதல் | முற்பகல் 7.15 |
| .............................................. | ................................ |
| பிரதேசத்திற்குக் குறுக்காக ஓடுதல் | முற்பகல் 8.00 |
| மெதுவான சைக்கிளோட்டம் | முற்பகல் 8.30 |
| .............................................. | ................................ |
| கயிறு இழுத்தற் போட்டி | முற்பகல் 10.00 |
| கிடுகு பின்னுதல் | முற்பகல் 10.30 |
| .............................................. | ................................ |
| நாட்டுப் பாடல்கள் | பிற்பகல் 2.00 |
| புத்தாண்டு அழகு இராணிப் போட்டி | பிற்பகல் 3.00 |
| .............................................. | ................................ |
| நல்ல சிரிப்பு | பிற்பகல் 4.00 |
| பரிசளிப்பு | பிற்பகல் 5.00 |
| தேசிய கீதம் | பிற்பகல் 5.30 |
| .............................................. | ................................ |

பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.


15. புத்தாண்டு விழாவைக் கொண்டாடுவதன் மூலம் மக்களிடையே விருத்தி செய்யப்படும் பண்பு யாது?
(1) நேர்மை (2) ஐக்கியம் (3) பணிவு

16. விழாவின் ஆரம்பத்தில் மங்கள முரசு ஒலித்தது. இங்கு "முரசு" என்பது பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கின்றது?
(1) மேளம் (2) புல்லாங்குழல் (3) சங்கு

17. பிரதேசத்திற்குக் குறுக்காக ஓடுதல் என்பது ஒரு
(1) மைதான நிகழ்ச்சி (2) வீட்டு நிகழ்ச்சி (3) ஓட்ட நிகழ்ச்சி

18. பிற்பகலில் கடைசியாக நிகழ்ந்த போட்டி நிகழ்ச்சி எது?
(1) பரிசளிப்பு (2) நல்ல சிரிப்பு (3) நாட்டுப் பாடல்கள்

தேசியகீதம் பாடப்பட்ட போது பின்வரும் இசைக்கருவியும் வாசிக்கப்பட்டது.



19. இந்த இசைக்கருவி எது? ..................................................................

20. உயர்ந்த தொனியை எழுப்புவதற்கு இந்த இசைக்கருவியின் நரம்புகள் தளர்வாகவா இறுக்கமாகவா இருத்தல் வேண்டும்? ..................................................................

21. இந்த இசைக்கருவியினால் இசைக்கப்படக்கூடிய ஏழு சுரங்களையும் எழுதுக?

..................................................................

22. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய புத்தாண்டு விழாவிற்கு மொத்தமாக எடுக்கப்பட்ட நேரம் எவ்வளவு?

..................................................................



Visit www.astan.lk for more past exam papers.

23. நிகழ்ச்சித் திட்டத்தில் இடம்பெற்ற போட்டி நிகழ்ச்சிகளுள் தனியொருவராக அன்றி ஒரு குழுவாக மட்டும் மேற்கொள்ளக்கூடிய நிகழ்ச்சி எது?

24. ஓட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் சிலர் Fast எனும் ஆங்கிலச் சொல்லை உச்சரித்தமை கேட்டது. இச் சொல்லின் பொருள் யாது?

..........................................................................

25. Fast எனும் சொல்லின் எழுத்துக்களை நெடுங்கணக்கு எழுத்துக்கள் அமையும் ஒழுங்கில் எழுதுக?

..........................................................................

26. விபுலன் பிரதேசத்திற்குக் குறுக்காக ஓடும் ஓட்டப்போட்டியில் வெற்றியீட்டிய தனது நண்பனுக்குப் பின்வரும் பாராட்டுக் கடிதத்தை எழுதினான். அவன் தனது கடிதத்தில் எந்த நிறுத்தக் குறிகளையும் பயன்படுத்தவில்லை. பொருத்தமான இடங்களில் சரியான நிறுத்தக் குறிகளை புகுத்துக.

மல்லிகைத் தோட்டம்
கட்டுகஸ்தோட்டை
1995.03.07

நண்பா நலம் உனக்கு எனது பாராட்டுக்கள்

இப்படிக்கு
அன்பார்ந்த நண்பன்

புத்தாண்டு வைபவத்தின் அத்தகைய இன்னுமொரு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதி பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 3.30 pm | 100 metres | - Girls |
| 3.45 pm | High Jump | - Boys |

27. மேலே தரப்பட்டுள்ள பகுதியைத் தமிழில் மொழிபெயர்த்துத் தருக.

........................... ............................... ...........................

........................... ............................... ...........................

நாளேடு ஒன்றினது ஒரு பக்கத்தின் கிழிந்து போன நான்கு துண்டுகள் கீழே காணப்படுகின்றன. அவை இங்கு ஓர் ஒழுங்கில் தரப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| நாம்<br>சாரதி<br>மார்ச் மாதம்<br>விளையாட்டுப்<br>ஏறத்தாழ | அமர்த்திய<br>பாடசாலை<br>காலை 7 மணிக்கு<br>ஏற்றிச் சென்றனர்<br>8 மணிக்கு | வாகனத்தின்<br>மாணவர்களை<br>மாவட்ட<br>அவர்கள்<br>திரும்பினர் | வாடகைக்கு<br>எமது<br>2ஆம் திகதி<br>போட்டிக்கு<br>இரவு |

28. இக் கடதாசித் துண்டுகளை சரியான ஒழுங்கில் வைத்தால் அதில் வாசிக்கக் கூடிய செய்தியை மீள எழுதுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

29. பாடசாலையில் வேறுபட்ட இடங்களில் பின்வரும் பெயர்ப்பலகைகள் காணப்படுகின்றன. அவை கருதுவது யாதெனத் தமிழில் எழுதுக.

* OFFICE .......................... * PLAY GROUND ..........................
* FARM .......................... * DRINKING WATER ..........................



Visit www.astan.lk for more past exam papers.

30. பின்வரும் ஒருமைச் சொற்களைப் பன்மைச் சொற்களாக மாற்றி எழுதுக.

* சாரதி .......................... * மாவட்டத்திற்கு ..........................
* பாடசாலை .......................... * நூலில் ..........................

மனிதனுக்கு இன்றியமையாத மூலவளங்களுள் நீரும் ஒன்றாகும். அவனது நாளாந்த வாழ்க்கைக்கு மட்டுமன்றி அவனது விவசாயம், கைத்தொழில் போன்றவற்றிற்கு நீர் அவசியமாகும்.

31. "நீர்" என்னும் இச் சொல்லின் கருத்தைத் தரும் வேறு இரு சொற்கள் தருக.

........................................................................ ........................................................

பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.

32. "ஆறு" என்பதற்கு வழங்கும் இன்னொரு பெயர் .................................. ஆகும்.
33. கடல் என்பதற்கு வழங்கும் இன்னொரு பெயர் .................................. ஆகும்.
34. தாவரங்கள் பிரதானமாக தமது .................................. வாயிலாகவே நீரை உறிஞ்சுகின்றன.
35. இலங்கையின் மிகப் பெரிய ஆறு .......................... ஆகும்.
36. இலங்கையின் அதியுயர்ந்த நீர்வீழ்ச்சி ...................... ஆகும்.
37. இலங்கையிலுள்ள நீர் மின்சார நிலையங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

.................................. ......................................

38. பின்வரும் பொருள்களுள் நீரில் கரையத்தக்கவற்றையும் நீரில் கரைய முடியாதவற்றையும் வெவ்வேறாக வகைப்படுத்துக.

மண்ணெண்ணெய், தேங்காயெண்ணெய், உப்பு, வினாகிரி, டீசல். குளோபரின் உப்பு

| நீரில் கரையக்கூடிய பொருட்கள் | நீரில் கரையமுடியாத பொருட்கள் |
|---|---|
| * ......................................... | ......................................... |
| * ......................................... | ......................................... |
| * ......................................... | ......................................... |
| * ......................................... | ......................................... |
| * ......................................... | ......................................... |

39. பின்வரும் சொற்களின் தொகுதி ஒவ்வொன்றுக்கும் தனிச்சொல் ஒன்றை எழுதுக.

* நீரினால் சூழப்பட்டிருக்கும் நிலம் ........................................
* ஆறுகள் அனைத்தினதும் நீர் சென்றடையும் இடம் ........................................
* நீரில் வாழும் உயிர்கள் ........................................

தந்தையார் சந்தையிலிருந்து வாங்கி வந்த உணவுப் பொருள்களின் பட்டியல் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

| உணவுப்பொருள் | | அளவு விலை |
|---|---|---|
| அரிசி | 1kg | ரூபா 28.00 |
| நெத்தலி | 250g | ரூபா 30.00 |
| பொன்னாங்கண்ணிக் கீரை | 2 கட்டு | ரூபா 10.50 |
| வாழைப்பழம் | 12 பழங்கள் | ரூபா 18.00 |
| எள்ளுருண்டை | 5 | ரூபா 5.00 |

40. இத்தகைய 100g நெத்தலியின் விலை யாது? ....................................
41. தந்தையார் வாங்கிய அரிசியினதும் நெத்தலியினதும் நிறை எத்தனை கிராமாகும்?..........................
42. 4 பயிற்சிப் புத்தகங்களை வாங்குவதற்குச் செலவிடும் தொகையும் தந்தையார் வாங்கிய 1kg அரிசிக்குச் செலவிட்ட தொகையும் சமமாயிருந்தால் 1 பயிற்சிப் புத்தகத்தின் விலையாது?

..................................

* பின்வரும் வினாக்களிலான சொற்களை அவற்றின் சரியான ஒழுங்கில் ஒழுங்குபடுத்தி இரு வாக்கியங்களை எழுதுக.

* * *



www.astan.lk

Visit www.astan.lk for more past exam papers.

43. தொடுதல் / இருக்கும் / திறந்தபடி / மினகம்பிகளை / ஆகாது

..........................................................................................................................

44. இருக்கும் பொழுது / ஈரமாக / மின்சாதனங்களை / தரை / பிடிக்கக்கூடாது / கைளினால்

..........................................................................................................................

* "செய்தித் தொடர்பு முறைகள்" எனும் தலைப்பில் கருத்துடைய ஆறு வாக்கியங்களை எழுதுக.

45. ..........................................................................................................................

..........................................................................................................................

46. ..........................................................................................................................

..........................................................................................................................

47. ..........................................................................................................................

..........................................................................................................................

48. ..........................................................................................................................

..........................................................................................................................

49. ..........................................................................................................................

..........................................................................................................................

50. ..........................................................................................................................

..........................................................................................................................

## வினாத்தாள் I 1995 டிசம்பர் - விடைகள்

* 1,2.3.4.5 ற்கான விடைகள் கீழே குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

* 2 (6) 8 4 3 4 2 7 (6) 1 3 6 4 [2] 5 2 8 1 9

(ன்) ச (ம) ப உ அ (க) (ம) ர ல ம

* கமலன்

* வித்தியாசங்கள்:-

6. மூக்கு 7. காது 8. கைவிரல் 9. கை மணிக்கூடு 10. கால்மேஸ்

11. தந்தி 12 திவசம் 13. வசந்தம் 14. பர்வதம் 15.சம்பந்தர்

16. 2 17. 2 18. 2 19. 1 20. 2

21. 1 22. 1, 2 23. 36 24. 3 25. 4, 20

26. நாள் - வியாழன்
தேதி - 10
27. மேற்கு (குடதிசை) 28. நீலம்

29. 3 ஆவது படம் 30. 3 ஆவது படம் 31. 2

32. 1 33. 2 34. 3

35. 2 36. 2,4,1,3,5 37. 2,4,1,3,5


38. 1,5,2,4,3 39. 1,4,3,5,2 40. 1,5,4,3,2

## வினாத்தாள் II 1995 டிசம்பர் - விடைகள்

1. சுசீலா பர்ணாந்து
2. "சுரம்யா" மல்லிகா வீதி, இரத்தினபுரி
3. டுபாய்
4. முற்பகல் 12.50
5. 2 மணி 30 நிமிடங்களின் பின்னர்
6. சென்னை (மதராஸ்)
7. 51.50 x 120 = 6,180.00 (ரூ 6,180.00)
8. இரத்தினக்கல்
9. கட்டுநாயக்கா
10. i. ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு
i. மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு
11. 8 மடங்குகளால்



www.astan.lk
Visit www.astan.lk for more past exam papers.




13. 450 மாணவர்கள்
14. ஸ்ரீலங்கா தாயே நம் ஸ்ரீலங்கா நமோ நமோ தாயே.
15. ஐக்கியம் 16. மேளம்
17. ஓட்டநிகழ்ச்சி 18. நல்ல சிரிப்பு
19. வயலின்
20. இறுக்கமாக இருத்தல் வேண்டும்.
21. ஸ.ரி.க.ம.ப.த.நி
22. 10 மணி 15 நிமிடங்கள் 23. கயிறு
இழுத்தல் போட்டி 24. விரைவாக
25. A. F. S. T

26.

மல்லிகைத் தோட்டம்,
கட்டுகஸ்தோட்டை,
1996.03.07.

நண்பா நலம். உனக்கு எனது பாராட்டுக்கள்.

இப்படிக்கு
அன்பார்ந்த நண்பன்,
விபுலன்.

27.. 3.30 பி.ப - 100 மீற்றர் - பெண்கள்
3.45 பி.ப - உயரம் பாய்தல் - ஆண்கள்

28.

| | | | |
|---|---|---|---|
| நாம் | வாடகைக்கு | அமர்த்திய | வாகனத்தின் |
| சாரதி | எமது | பாடசாலை | மாணவர்களை |
| மார்ச் மாதம் | 2ம் திகதி | காலை 7 மணிக்கு | மாவட்ட |
| விளையாட்டுப் | போட்டிக்கு | ஏற்றிச் சென்றனர். | அவர்கள் |
| ஏறத்தாழ | இரவு | 8 மணிக்குத் | திரும்பினர். |

29. * OFFICE - அலுவலகம் * PLAY GROUND - விளையாட்டு மைதானம்
* FARM - தோட்டம், பண்ணை * DRINKING WATER - குடிநீர்

30. சாரதி - சாரதிகள் - மாவட்டத்திற்கு - மாவட்டங்களிற்கு
பாடசாலை - பாடசாலைகள் - நூலில் - நூல்களில்

31. i. தண்ணீர் ii, ஜலம் 32. ஆறு - நதி 33. கடல் - ஆழி

34. வேர்களின் 35. மகாவலி 36. விக்ரோரியா 37. விக்ரோரியா- லக்ஷபானா

38.

| நீரில் கரையக்கூடிய பொருட்கள் | நீரில் கரையமுடியாத பொருட்கள் |
|---|---|
| உப்பு | மண்ணெண்ணெய் |
| வினாகிரி | தேங்காயெண்ணெய் |
| குளோரபின் உப்பு | டீசல் |

39. i. தீவு ii, கடல் iii. நீரினங்கள் 40. ரூபா 12.00

41. 1250கிராம் 42. ரூபா. 7.00 43. திறந்தபடி இருக்கும் மின்கம்பங்களை தொடுதல் ஆகாது.

44. தரை ஈரமாக இருக்கும் போது மின்சாதனங்களைக் கைகளினால் பிடிக்கக் கூடாது.

45. செய்தித் தொடர்பு சாதனங்களில் பத்திரிகை. வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, செய்மதி போன்றவை அடங்கும்.



Visit www.astan.lk for more past exam papers.

46. இதன் மூலம் உலகின் எந்த மூலையிலும் நடக்கும் நிகழ்வுகளை உடனுக்குடன் மக்கள் அறியக் கூடியதாக இருக்கின்றது.

47. அரசு தனது அவசரகாலத்திட்டங்கள் மாற்றங்கள் பற்றி உடனுக்குடன் நாட்டு மக்களுக்குத் தெரியப் படுத்தக் கூடியதாக அமைகின்றது.

48. அரச, தனியார் நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத்துவதற்காகவும் சிறந்த இலாபத்தைப் பெறுவதற்காகவும் பொருட்களை இத்தொடர்பு சாதனங்கள் மூலம் விளம்பரப்படுத்தி அவற்றின் மூலம் சிறந்த பயனைப் பெறுகின்றன.

49. இத்தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியினால் மக்களிடையே பொது அறிவு, கலை, கலாச்சாரம் ஐக்கியம் முதலானவை பேணப்படுகின்றன.

50. உலக நாடுகள் மட்டுமன்றி எமது நாடும் இன்று செய்தித் தொடர்புமுறைகளில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளதை நாம் இன்று காண்கின்றோம். இலங்கையின் செய்தித் தொடர்பு அமைச்சராக இப்போது தர்மசிறி சேனநாயக்க கடமையாற்றுகின்றார்.



Visit www.astan.lk for more past exam papers.